# நல்லூர் பிரதேச சபை

## யாழ்ப்பாண மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 05 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2010 மார்ச் 30 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய நல்லூர் பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களைப் பராமரித்து வந்திருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி நல்லூர் பிரதேச சபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாக நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் கணக்குகளுடன் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிசார் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் செலவினம் மற்றும் சொத்துக்கள் என சந்தர்ப்பங்கள் மற்றும் பெறுமதிகளின் கீழ் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| | நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | | | |
|---|---|---|---|---|
| | செலவினம் | | சொத்துக்கள் | |
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
| | | ரூபா | | ரூபா |
| நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் கூறல்கள் | 01 | 625 | - | - |
| நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் கூறல்கள் | - | - | 01 | 10,911,793 |
| கணக்குகளில் விடுபாடுகள் | - | - | 01 | 686,640 |

**1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்**

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,099,951 ஆக இருந்தது.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை**

**கணக்காய்விற்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்கள் இன்மை காரணமாக மொத்தம் ரூபா 84,571,721 ஆன கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**1.3.5 இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள். விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள். விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்கி ஓழுகாமைகள் |
|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) ஒழுங்கு விதிகள் | |
| I ஆம் அத்தியாயத்தின் 05 ஆம் பிரிவின் XII ஆம் உப பிரிவு | |
| 5 ஆம் ஒழுங்குவிதி | களஞ்சியம் மற்றும் காசிற்கு பொறுப்பாக உள்ள உத்தியோகத்தரிடமிருந்து போதிய பிணை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2007 மார்ச் 03 ஆந் திகதிய உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் பெறுமதிசேர் வரியின் மீதான நிறுத்தி வைத்தல் வரி சுற்றறிக்கை | மீளாய்வாண்டில் அறவிடப்பட்ட பெறுமதிசேர் வரியின் மீதான நிறுத்தி வைத்தல் வரி ரூபா 12,415 உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 153 ஆம் பிரிவு | பெறுமதிசேர் வரி ரூபா 779,531 அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 61,954,464 ஆக இருந்ததுடன் இதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 34,464,527 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவை பற்றிய நிலைமைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2010 பாதிடப்பட்டவை | 2010 உள்ளபடியானவை | 2010 31 திசெம்பரில் திரண்ட நிலுவை | 2009 பாதிடப்பட்டவை | 2009 உள்ளபடியானவை | 2009 31 திசெம்பரில் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| வாடகை மற்றும் வரிகள் | 3,045 | 2,703 | 5,976 | 3,015 | 2,600 | 8,953 |
| குத்தகை வாடகை | 32,170 | 45,757 | 1,004 | 9,872 | 14,311 | 405 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 835 | 1,189 | 12 | 835 | 843 | - |
| ஏனைய வருமானங்கள் | 51,722 | 47,232 | 19,531 | 46,891 | 48,166 | - |

**2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம்**

பல்வேறு நியதிச்சட்டங்களின் கீழ் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தினால் 2010 திசெம்பர் 31 வரை சேகரிக்கப்பட்டு பிரதான செயலாளரிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த ரூபா 1,810,700 நீதிமன்றத் தண்டப்பணத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 முத்திரைக் கட்டணங்கள்**

2010 ஆம் ஆண்டிற்காக பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட வேண்டிய முத்திரைக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.4 வருமானக் கடன்பட்டோர்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகளின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பில் அறவிடப்பட வேண்டிய ரூபா 33,333,097

வாடகை, வீதவரிகள், அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் ஏனைய வருமானங்களை அறவீடு செய்வதற்கு 2010 திசெம்பர் 31 வரை தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 செலவினக் கட்டமைப்பு**

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகள் தொடர்புடைய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **பாதீடு செய்யப்பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** | **பாதீடு செய்யப்ட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** |
| | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| ஆளுக்குரிய வேதனம் | 34,921 | 28,080 | 6,841 | 31,003 | 26,044 | 4,959 |
| ஏனையவைகள் | 8,411 | 6,846 | 1,565 | 6,555 | 5,412 | 1,143 |
| உப மொத்தம் | 43,332 | 34,926 | 8,406 | 37,558 | 31,456 | 6,102 |
| **மூலதனச் செலவு** | 53,935 | 47,024 | 6,911 | 27,250 | 20,930 | 6,320 |
| முழு மொத்தம் | 97,267 | 81,950 | 15,317 | 64,808 | 52,386 | 12,422 |

**2.4 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியனர் எண்ணிக்கை**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கையும் பற்றிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| **பதவி வகை** | **அங்கீகரிக்கப்பட்டவை** | **உள்ளபடியானவை** |
|---|---|---|
| பதவிநிலை மட்டம் | 05 | 04 |
| இரண்டாம் மட்டம் | 37 | 35 |
| ஆரம்ப மட்டம் | 48 | 46 |
| ஏனையவர்கள்(சமயாசமா/தற்காலிகம்) | - | 11 |
| | 90 | 96 |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

ரூபா 275,000 பெறுமதியான லேன்ட மாஸ்ரர் ஒன்று 3 ஆண்டுகளிற்கும் மேலாக பயன்படுத்தப்படாதுள்ளமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையில் அவதானிக்கப்பட்டது.

### 2.5.2 பெறவேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 28,087,118 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடத்திற்கும் மேலாக பெறவேண்டியிருந்த தொகை ரூபா 283,712 ஆகும்.

### 2.5.3 பெறவேண்டிய பதவியணிக் கடன்கள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய பதவியணிக் கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 8,451,511 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடத்திற்கும் மேலாக பெறவேண்டியிருந்த தொகை ரூபா 1,679,528 ஆகும்.

### 2.5.4 அசைவுறாத நடைமுறைச் சொத்துக்கள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்கும் மேலாக அசைவுறாதிருந்த நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 535,322 ஆகும்.

### 2.5.5 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீகப் மெய்மையாய்வுச் சபை அறிக்கையினால் உறுதிப்படுத்தப்படாது 2010 திசெம்பர் 31 இல் காணப்பட்ட புத்தகப் பெறுமதியின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டிருந்த சொத்துக்களின் பெறுமதி ரூபா. 99,402,916 ஆகும்.

## 2.6 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

நெல்சிப் செயற்திட்ட உத்தியோகத்தரின் விடுதிக் கட்டணமாக ரூபா 2,750 செலுத்தப்பட்டிருந்தது.

## 2.7 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

### (அ) தனியார் காணியினைக் கொள்வனவு செய்தல்

ரூபா 200,000 பெறுமதிய நிலவிய காலத்தில் காணியினைக் கொள்வனவு செய்வதற்காக 2002 ஆம் அண்டில் செய்திப்பத்திரிகையொன்றில் சபை விளம்பரமொன்றை பிரசுரித்திருந்தது. ஆனால் மீளாய்வாண்டிக் அக் காணி ரூபா 12,035,896 இற்கு சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. தீர்மானத்தினை மேற்கொள்வதற்கு தாமதம் செய்ததன் விளைவாக சபைக்கு ரூபா 10,035,896 இழப்பேற்பட்டிருந்தது.

(ஆ) இணைந்த படி செலுத்தப்பட்டிருக்கையிலும் கூட உத்தியோகத்தர் ஒருவரிற்கு விடுதிக் கட்டணமாக ரூபா 2,300 செலுத்தப்பட்டிருந்தது.

## 2.8 செயலாற்றல்

கணக்காண்டின் தொடக்கத்தில் சபையினால் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அடைந்து கொள்வதற்கு எதிர்பார்த்த குறிக்கோல்கள் மற்றும் அதன் மீதான செயன்முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்ய முடியவில்லை.

## 2.9 ஒப்பந்த நிர்வாகம்

### முழுமையாக கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

பண்முகப்படுத்தப்பட்ட பாதீட்டின் ரூபா 50,000 மதிப்பீடு கொண்ட கம்பன் சனசமூக நிலைய கட்டிட புனர்நிர்மாண செயற்திட்டம் காணிப்பிரச்சினை காரணமாக முழுமையாக கைவிடப்பட்டிருந்தது.

## 2.10 உள்ளகக் கணக்காய்வு

பிரதேச சபையில் போதிய அளவில் உள்ளகக் கணக்காய்வு இடம் பெற்றிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்